**கொழும்பு மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஜுன் 08 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஒக்தோபர் 13 திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கொழும்பு மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 வங்கிக் கணக்குகளின் ரூபா 120,648,635 தொகைக்கான வரவு மீதி, 05 வங்கிக் கணக்குகளில் ரூபா 2,485,673,842 தொகைக்கான மேலதிகப் பற்று (செலவு) மீதியுடன் எதிரீடு செய்யப்பட்டு ரூபா 2,365,025,207 தொகை என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல். | வங்கியினால் சபைக்குச் சொந்தமான 09 கணக்குகளும் ஒரு நிதியம் என கணிக்கப் படுவதனால் ஒவ்வொரு கணக்குகளையும் வெவ்வேறாக எடுத்த போது செலவு மீதி காட்டப்பட்ட போதிலும் ஒட்டுமொத்த மீதி செலவு மீதி ஒன்று (மேலதிகப் பற்று) எனக் கணிக்கப்படுவ தனால் ஒட்டுமொத்தப் பொறுப் புக்களை தீர்க்கப்படாமல் வரவு மீதியுடைய கணக்குகளில் காணப்படும் பணத்தை திருப்பி எடுக்கும் இயலுமை சபைக்கு காணப்படாமையால் ஒட்டு மொத்த மேலதிகப் பற்று பெறுமதியினை பொறுப்பு ஒன்று என நிதி நிலைமைக் கூற்றில் முகப்பில் காட்டப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவிப்பதற்கு விரும்புகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர துணை உயிரின ஆய்வு கூடம் மற்றும் நகர தொழிற்சாலை தவிர ஏனைய 16 களஞ்சியங் களில் வருட இறுதியில் உள்ள இருப்பு மீதியை பௌதீக ரீதியாக கணிக்காமல் ரூபா 328,983,419 இற்கான புத்தகப் பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டி ருந்தது. | வருட இறுதியில் உள்ள இருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்து சரியான பெறுமதியை கணக்குகளில் சீராக்கல் செய்யப் பட வேண்டும். | இருப்பு மீதியின் பெறுமதி கணிக்கப்படாவிடினும் கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் முதல்வந்து முதல் செல்லல் முறையில் வழங்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், கையில் இருப்பு குறிப்பிட்ட GRN பெறுமதியின் மீது கணிக்கப்படுவதனால் காட்டப்பட்டுள்ள பெறுமதி சரியானது என கருணையுடன் அறிவிக்கின்றேன். |
| (இ) | நகர தொழிற்சாலை மற்றும் நகர துணை உயிரின ஆய்வு கூடத்தில் இருப்பு விடயம் முறையே 274 இன் மற்றும் 40 இன் பெறுமதி கணிக்கப்பட்டு இருப்பு மீதிக்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அனைத்து இருப்பு க்களும் கணிக்கப் பட்டு இறுதி இருப்பை கணக்கீடு செய்தல் மற்றும் காலங்கடந்துள்ள இருப்புக்களை முறையான அங்கீகாரத்துடன் கணக்குகளில் இருந்து அப்புறப் படுத்தப்பட வேண்டும். | நகர தொழிற்சாலை களஞ்சியமும் கணினி மயப்படு த்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படுவதனால் இந்த வழுக்களை தவிர்க்க கூடியதாக இருப்பதுடன், அதன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக் கின்றேன். நகர துணை உயிரின ஆய்வுகூடத்தில் 40 விடயங்களின் பெறுமதி கணக்குகளில் சீராக்கல் செய்யப்படாமைக்கு இருப்புக் கணிப்பீட்டு சபையினால அவ் விடயங்கள் காலவதியானவை என குறிப்பிடப்பட்டிருந்தமை யினாலே ஆகும். |
| (ஈ) | 4 சந்தர்ப்பங்களில் நகர துணை உயிரின ஆய்வு கூடத்தின் இருப்பு மீதி என கணிக்கப்பட்ட பெறுமதி சரியானவையாகக் காணப்படாமையால் இருப்பு மீதி ரூபா 3,308,907 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட மீதி களில் வித்தியாச ங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | இவ் விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கணிப்பீட்டு சபையின் தலைவர் மற்றும் துணை உயிரின ஆய்வு கூடத்தின் தலைவர் ஆகியோரிடம் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் தவிர்ந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதே போல் இதனை கணனி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு வதனால் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்க்க இயலுமாகும். |
| (உ) | பெற வேண்டிய நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 247,209 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | இது முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் குறைபாடு ஒன்று என்பதனால் தாமதமின்றி சரி செய்தல். | இந்த நிலைமையை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திருப்பிச் செலுத்த வேண்டிய களியாட்ட வரி வைப்புக்கள் ரூபா 14,456,302 தொகை எனினும் அதனை ரூபா 14,302,467 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்த மையால் அம்மீதி ரூபா 153,835 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளை விரைவாக சரிசெய்தல். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள வித்தியாசம் 2018 ஆண்டிற்கு முன்னர் பெற வேண்டிய வருமானத்தின் வித்தியாசம் ஒன்றாக காணப்பட்டதுடன் எதிர்காலத்தில் இந்த வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். |
| (எ) | பெற வேண்டிய அங்காடி வர்த்தக நிலைய வாடகை ரூபா 473,149,925 தொகை எனினும் அம் மீதி நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 473,618,267 தொகை என பதிவு செய்யப்பட்டமையால் அம் மீதி ரூபா 468,342 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளை விரைவாக சரிசெய்தல். | நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டுள்ள பெற வேண்டிய மீதி ரூபா 473,618,267 தொகை என காட்டப்பட்டமை சரியானது என எதிர்காலத்தில் வித்தியாசத் திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் கருணையுடன் சுட்டிக் காட்டுகின்றேன். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான தீ அணைப்பு வருமானம் ரூபா 5,457,864 தொகை எனினும் நிதிக் கூற்றுக் களில் அவ்வருமானம் ரூபா 2,104,382 தொகை என பதிவு செய்யப்பட்டுள்ளமையால், அவ் வருமானம் ரூபா 3,353,482 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளை விரைவாக சரிசெய்தல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஐ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 124,743,541 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 125,370,993 தொகை என பதிவு செய்யப்பட்டமையால், அவ் வருமானம் ரூபா 627,452 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நீதிமன்றத் தண்டப்பண வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் மற்றும் அதற்கான சரியான அட்டவணைகள் சமர்ப்பித்தல். | 2019 ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 124,743,541 தொகை நீதிமன்ற தண்டப்பணம் அடங்கக் கூடிய வருமானத் தலைப்பு ஆகிய 7113015007 இற்கு நீதிமன்றத் தண்டப்பணப் பெறுவனவு களுக்கு மேலதிகமாக கடைகளுக்கு உரிய தண்டப் பணமும் கணினி முறைமை ஊடாக உட்படுத்தப்படுவதுடன், கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் இடையே காணப்படும் வித்தியாசம் இதுவாகும். |
| (ஒ) | அட்டவணையின் படி காணி மற்றும் சுற்றாடல் பிரிவின் வாடகை வருமானம் ரூபா 3,742,379 | வருமானத் தலைப்புகளுக்காக சரியான வருமானம் | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தொகை எனினும், அவை ரூபா 4,548,785 தொகை என நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் அவ்வருமானம் ரூபா 806,406 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படுதல் மற்றும் சரியான அட்டவணைகள் தயாரித்தல். | |
| (ஓ) | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆண்டின் போது பெற்றிருந்த கடன் தொகை ஆகிய ரூபா 2,529,154,594 தொகையில் திருப்பிச் செலுத்த வேண்டிய 17.5 சதவீதத்திற்கு சமமான தொகை யான ரூபா 526,807,886 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் இறுதிக் கணக்குகளின் படி அத் தொகை ரூபா 472,602,053 தொகையாகக் காணப்பட்டமையால், பொறுப்புக்கள் ரூபா 54,205,833 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் சரியான தரவுகளின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல். | ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் வருடாந்தம் அனுப்பப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நகர சபையினால் கணக்குகள் பதியப்படுவதுடன், கணக்கு விடய வித்தியாசம் கால தாமதம் மற்றும் செலாவணி விகிதாசாரத்தில் வித்தியாசம் என வெளியிடப் பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இந்த மீதிகள் இடையே வித்தியாசங்களை பரிசோதனை மேற்கொண்டு தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ஔ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டியவரி உரிய முறையில் செலுத்தப் படாமையால் ரூபா 23,572,588 இற்கான தண்டப்பணம் ஒன்று செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தல். | ரூபா 23,572,588 இற்கான தண்டப்பணம் 2016 முதலாம் காலாண்டிற்கானதென காணப்பட்டதுடன் அக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள முறையில் 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட அட்டவணைகள் ஒப்படைக்காமை காரணம் என சுட்டிக் காட்டி குறிப்பிட்ட தண்டப்பணத்தை அகற்றுமாறு விண்ணப்பித்து மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (க) | ஹெவ்லொக் வீதி 149B இலக்க ஆம் விளையாட்டுத் திடலை வாடகைக்கு பெற்றிருந்த அமைப்புடன் அனுகியிருந்த ஒப்பந்தத்தின் படி 2019 ஆண்டிற்கான குத்தகை வருமானம் ரூபா 2,760,000 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவை ரூபா 1,380,000 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் குத்தகை வருமானம் ரூபா 1,380,000 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | குத்தகை உடன்படிக்கையின் படி சரியான கட்டணம் அறவீடு செய்தல் மற்றும் சரியான கட்டணத்தை கணக்கீடு செய்தல். | இது தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுப்பதற்காக சபை பிரேரணை ஒன்று சமர்ப்பித்திரு ந்ததுடன் அத் தீர்மானத்தின் படி எதிர்காலத்தில் அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறுதியாக கணித்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ச) | ஹெவ்லொக் வீதி 149 மற்றும் 149/1 இலக்க விளையாட்டுத் திடல் விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு குத்தகைக்கு கொடுத்ததன் மூலம் 2019 ஆண்டிற்கான வருடாந்த குத்தகை வருமானம் ரூபா 1,500,000 தொகை எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் குத்தகை வருமானம் ரூபா 900,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்த மையால் வருமானம் ரூபா 600,000 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைத் தொகை ரூபா 2,400,000 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் சபைக்கு ரூபா 75,000 தொகை மிகையாகக் செலுத்தப் பட்டிருந்ததென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 2,400,000 தொகை குறைவாகவும் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 75,000 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குத்தகை உடன்படிக்கையின் படி சரியான வருமானத்தை கணக்கீடு செய்தல் மற்றும் விரைவாக வருமானத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். | 2016 முதல் செலுத்த வேண்டிய நிலுவை வாடகை யை கணித்து கொடுப்பனவு செய்வதற்கு செய்முறை ஒன்று தீர்மானித்து அனுப்பும் படி அறிவித்து கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதன் படி அவர்கள் கோரியுள்ள சலுகைக் காலத்தின் கீழ் இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றது என கருணையுடன் அறிவிக்கின்றேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 124 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள பெறுமதி மற்றும் உரிய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 1,863,255,547 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | தேவையான இணக்கங்கள் மேற்கொள்ளப் பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இதனை 2020 ஆண்டின் வாக்குப்படி பேரேட்டில் சரியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 19 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 11,557,186 இற்கான 23 பெற வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய உச்ச அளவு தொகையை அறவீடு செய்தல் மற்றும் அறவீடு செய்வதற்கு முடியாது என உறுதிப் படுத்தப்பட்ட மீதிகளை முறையான அங்கீகாரத்தின் மீது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | மீதிகளை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிப்பதற்கு அல்லது கணக்குகளை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதுடன் விரிவான தகவல்களை பெற்றுக் கொள்ளும் வசதியின்மை மீது இந்த அலுவல்கள் தாமதம் அடைந்து காணப்பட்டது. |
| (ii) | பல வருட காலம் முதல் இடையறாமல் நிதிக்கூற்றுக் களில் உட்படுத்தப்பட்டிருந்த, உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆனால் தீர்க்கப்பட்டிருக்காத சிறுகாசு மற்றும் விஷேட முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,955,604 தொகையாகக் காணப்பட்டதுடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2001 ஆண்டின் போது கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கு முறைமை ஆரம்பிக்கப்பட்டதுடன், அம் முறைமை அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட தீர்க்கப்படாத சிறுகாசு முற்பண மீதி ரூபா 3,863,450 தொகையாகக் காணப்பட்ட போதிலும் இனங்காணப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட்ட மையால் 2019.12.31 திகதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 2,955,604 தொகையாக மாறி இருந்தது. ஏனைய மீதிகள் தொடர்பான தகவல்கள் இது வரை கண்டறிய முடியாதிருந்தது. |
| (iii) | நிதி நிலைமைக் கூற்றில் கடன்பட்டோர் மீதியுள் செயற்படாமல் காணப்பட்ட 3615 கணக்குகள் தொடர்பாக ரூபா 412,426,061 இற்கான மீதிகள் காணப்பட்டன. | செயற்படாத கணக்கு களை செயற்படுத்து வதற்கு அல்லது மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3615 செயற்படாத கணக்கு களில் அங்காடிக் கடைகள், வியாபார நிலையங்கள் ஆகிய கடன்பட்டோர் மீதி உட்படுவதுடன், அந்த செயற்படாத வியாபார நிலையங்கள் அநேகமான வற்றை இனங்கண்டு கேள்வி மூலம் அல்லது சாட்டுதல் மூலம் சபைக்கு வருமானம் ஒன்றினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உடைத்து |

| | | |
|---|---|---|
| | | அகற்றப்பட்டிருந்த ஆனால் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள செயற்படாத கணக்குகளை அகற்றுவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. அதன் படி கணினி மயப்படுத்தப்பட்ட தகவல் களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என கருணை யுடன் அறிவிக்கின்றேன். |

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| சுமார் 19 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து காணப்படும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 99,848,922 தொகையினை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்க்கக் கூடிய மீதிகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் திருப்பிச் செலுத்த வேண்டிய மீதிகளை வருமானத் திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல். | 2001 ஆண்டில் கணினி மயப்படுத்தும் கணக்கீட்டு முறைமை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட திருப்பிச் செலுத்தியிருக்காத வைப்பு மீதியாகிய ரூபா 99,848,922 தொகையுள் 2001 ஆண்டிற்கு முன்னர் சேர்க்கப்பட்டிருந்த சிராப்பர் அலுவலர்களின் மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு பணம் மற்றும் 2001 ஆண்டிற்கு முன்னர் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் என பெற்றிருந்த பணம் கணக்கீடு செய்யப்பட்டி ருந்தது. 18 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் இந்த வைப்புக்கள் இடையே தீர்க்கப்படக் கூடிய வைப்புக் களை முடியுமான அளவு இனங்கண்டு எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,355,430,073 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு/ மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்விற்கான தகவல்களை சமர்ப்பித்தல். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மைகள் | | |
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 218 | - | நகர முதல்வரினால் நிதியாண்டிற்குள் நிர்வாகம் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்று சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிர்வாக அறிக்கை நிதியாண்டிற்குள் தயாரித்து சமர்ப்பித்தல் | 2019 நிதியாண்டிற்கான கொழும்பு மாநகர சபையின் நிர்வாக அறிக்கை தயாரிப்பதற்காக அதற்கான தகவல்களை வழங்கும் படி தற்போது அனைத்து திணைக்களங்கள், நிறுவன பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2019 ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | அத்தியாயம் XIX உப பிரிவு 5.2.1 | - | வீட்டு வாடகை அறவிடப்படாமை. | தாபனக் கோவையின் படி வீட்டு வாடகை அறவிடல் மற்றும் தண்ட வாடகை அறவிடல். | அத்தியாயம் XIX உப பிரிவு 5.2.1 மற்றும் பொ.நி.சு. 4/2016 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ வாசஸ்தல வாடகை அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கும் படி 2020/06/04 திகதிய உள்ளகச் சுற்றறிக்கை 7/2020 இன் மூலம் அனைத்துத் திணைக்களத் தலைவர்களையும் அறிவுறுத்தி அவ் அலுவல் முறைப் படுத்தப்பட்டது. |
| (ii) | அத்தியாயம் XIX பிரிவுகள் 6.1 | - | குறிப்பிட்ட காலவரையறையை மிகைத்து உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வதிதல் | காத்திருக்கும் பதிவேடொன்று தயாரித்து அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் நியாயமான சந்தர்ப்பம் கிடைக்கக் கூடிய வகையில் செயற்படுதல். | கொழும்பு மா நகர சபையில் சேவைக்கு வரக்கூடிய உத்தி யோகத்தர்களின் சேவையின் தேவை யின் மீது அவர்கள் கொழும்பு மா நகர சபை எல்லையுள் தங்கியிருத்தல் அத்தியவசியமாக இருப்பதனால் அவர்கள் கொழும்பு மா நகர சபையில் கடமையாற்றும் காலம் முழுவதும் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்குவது அத்தியவசியமாகும். அதே போல் சேவையின் தேவையின் நிமித்தம் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை பட்டோலைப்படுத்தல் நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | அத்தியாயம் XIX பிரிவு 7.2 | 35,120,502 | தண்டணை வாடகை அறவிடப்படாமை | தண்டணை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | உரிய தண்டணை காலத்தை கணித்து அறவீடு செய்வதற் காக அவர்களின் சேவை நிலையத் திற்கு மற்றும் நியமன அதிகாரி களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. |
| (iv) | அத்தியாயம் XIX பிரிவு 7.1 | - | வீடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. | சட்ட நடவடிக்கை விரைவுபடுத்தல். | உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து அகற்று வதற்காக சட்டப் பிரிவுக்கு அனுப்பப் பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | (i) நி.பி.396(ஈ) | 19,997,657 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பன வுக்காக சமர்ப்பிக்கப் படாத ஆறு மாத காலத்தை மிகைத்துள்ள 597 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | ரூபா 19,997,657 இற்கான மற்றும் ரூபா 10,620,676 பெறுமதியான காசோலைகளை வருமானத்துக்கு எடுப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள துடன் ரூபா 614,470 தொகை பெறுமதி யான காசோலைகள் தற்போது வருமானத் திற்கு எடுக்கப் பட்டுள்ளன. மீதியான காசோலைகள் தற்போது வருமானத் திற்கு எடுக்கப்பட்டு வருகின்றது. |
| | (ii) நி.பி.1646 | -- | 448 வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல். | கருத்து தெரிவிக்கப் படவில்லை. |

#### 1.4.2 வரித் தேவைகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆண்டு முதல் பெறுமதி கூட்டிய வரி திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்படாமையால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரியின் பெறுமதி ரூபா 136,080,242 தொகை ஆகும். | வரி திரட்டுக்கள் தாமதம் இன்றி சமர்ப்பித்தல் மற்றும் பெறுமதி கூட்டிய வரி அனுப்புதல். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 771,876,261 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,312,992,879 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையினால் பேணப்பட்டு வந்த 05 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக ரூபா 13,060,848 தொகைக்கான நேர் செலவு வைத்தல் அல்லது பிழையாக வரவு வைத்தல்களும் 05 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக ரூபா 10,951,686 தொகை நேர்வரவு வைத்தல் அல்லது பிழையாக வரவு வைத்தல் என்பவற்றை இனங் கண்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த நேர் வரவு வைத்தல் மற்றும் நேர் செலவு வைத்தல்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |
| (ஆ) | 03 நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 1 முதல் 3 வருடங்களுக்குள் தேறப்படாத ரூபா 397,861 தொகைக்கான 36 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேறப்படாத காசோலைகளுக்காக பணம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலையான வங்கி மேலதிகப்பற்று தொடர்ச்சியாக அதிகரித்திருத்தல் மற்றும் தற்காலிக வங்கி மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக் கொண்ட காரணத்தினால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி மேலதிகப் பற்று ரூபா 2,365,025,206 தொகை யாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்கான வங்கி மேலதிகப் பற்று வட்டி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 272 சதவீதத் தினால் அதிகரித்திருந்தது. | வருமானங்கள் மற்றும் செலவுகளை சிறந்த முறையில் கட்டுப்படுத்தல் மூலம் முறையான நிதிக் கட்டுப்பாடு ஒன்றினைப் பேணல். | எதிர்பார்க்காத விதமாக மாற்றம் அடையும் சமூகம் சார், பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைக்கு மத்தியில் சபை கடும் நிதி நெருக்கடிக்கு முகங் கொடுத்து வருவதினால் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளல் தவிர்க்க முடியாத விடயம் ஒன்றாக உள்ளது. அட்டவணைகள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் மாகாண சபையினால் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் வழங்கப்படாமை யால் இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளது. |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீதவரியும் வரியும்**

**(அ) வீதவரி**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரி மீதி ரூபா 3,248,509,196 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 500,000 தொகை இனை மிகைத்துள்ள 799 ஆதன அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 1,509,086,818 தொகையாகக் காணப்பட்டது. அது மொத்த நிலுவையில் 47 சதவீதம் ஆகும். | ரூபா 500,000 மிகைத்து ள்ள ஆதனங்களில் இருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட வீதவரியை அறவீடு செய்தல் மற்றும் அறவிடப்படாத ஆதனங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வீதவரி மீதியில் ரூபா 328,667,418 தொகை 2020.08.27 திகதி அளவில் அறவிடப்பட்டிருந்ததுடன், 2020 ஆண்டிற்கான மொத்த சிட்டையிடல்களின் 65 சதவீதம் அதாவது ரூபா 2,666,676,847 தொகை தற்போது அறவிடக் கூடியதாக காணப்பட்டது. ரூபா 500,000 இனை மிகைத்துள்ள நிலுவை வீதவரியைக் கொண்ட ஆதனங்களில் 2020 ஆகஸ்ட் 27 திகதியில் உள்ளவாறு ரூபா 37,551,690 தொகை அறவிடப்பட்டதுடன், அவை மொத்த நிலுவை அறவீடு களில் 11 சதவீதம் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 500,000 ஐ விட மிகையான நிலுவை வீதவரியில் 166 அரச ஆதனங்கள் தொடர்பான மொத்த நிலுவைத் தொகை ரூபா 486,021,043 ஆகக் காணப்பட்டது. இது ரூபா 500,000 ஐ விட மிகையான நிலுவை வரி ஆதனங்களில் 20 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மொத்த நிலுவை வீதவரி வருமானத்தின் 15 சதவீதம் ஆகும். | அரசாங்க ஆதனங்கள் தொடர்பான நிலுவை வீதவரி தொடர்பான நிறுவனத் தலைவர் களை அறிவுறுத்து வதன் மூலம் அறவீடு செய்தல். | 2020 ஆகஸ்ட் 27 திகதி அளவில் ரூபா 500,000 இற்கு மிகையான நிலுவை வீதவரியுடைய 123 அரச ஆதனங்கள் காணப்பட்ட துடன் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 500,000 ஐ விட மிகையான நிலுவை மீதிகளை உடைய அரச ஆதனங்களுக்காக காணப்பட்ட நிலுவையில் ரூபா 7,443,086 தொகை இது வரை அறவீடு செய்யக் கூடியதாக இருந்தது. |
| (iii) | ரூபா 500,000 ஐ விட மிகையான நிலுவை மீதிகள் காணப்படும் ஆதனங்களில் 2019 ஆண்டின் போது வீதவரி ஏதும் செலுத்தப்படாத 462 ஆதன அலகுகள் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்த நிலுவை தொகை ரூபா 872,319,455 தொகைக் காணப்பட்டது. | காணப்படும் சிக்கல் களை தாமதம் இன்றி தீர்த்து நிலுவை வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல். | வழக்கு விடயங்கள் காணப்படல், ஆதனங்களை இனங்காண்பதில் சிக்கல்கள் காணப்படல் போன்ற காரணங்களால் சில ஆதனங்களில் இருந்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது. சிக்கல்கள் காணப்படும் ஆதனங்கள் தொடர்பாக தேவையான சந்தர்ப்பங்களில் இடப் பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத் தின் உதவியையும் பெற்றுக் கொண்டு சிக்கல்களை தீர்க்கப்பட்டு வருகின்றது. |
| (iv) | ரூபா 10,000,000 ஐ விட மிகையான வீதவரி ஆதனங்களின் எண்ணிக்கை 24 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்த நிலுவை ரூபா 424,432,472 தொகை ஆகும். | காணப்படும் சிக்கல் களை தாமதம் இன்றி தீர்த்து நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | ரூபா 10,000,000 இனை விடக் கூடிய நிலுவை மீதியை உடைய ஆதனங் களில் அனேகமானவை அரச அமைச்சுக்கள் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்குச் சொந்தமான ஆதனங்களாகக் காணப்பட் டதுடன் 2020 ஆகஸ்ட் 27 திகதியில் உள்ளவாறு ரூபா 2,017,758 இற்கான தொகையினை அறவிடக் கூடியதாக இருந்தது. மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (v) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 230(4) ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் பிரசுரிக்கப் பட்டிருந்த 1988 பெப்ரவரி 19 திகதிய 494 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் ஜனவரி மாதத்தில் அல்லது முதல் மூன்று மாதங்களில் வீதவரி செலுத்து வோரிடம் முறையே 10 சதவீதம் அல்லது 5 சதவீத கழிவு பெற்றுக் கொள்வதற்கு உரிமை ஒன்று காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைகள் காணப்பட்ட போதிலும் நடைமுறை ஆண்டிற்கான கொடுப்பனவை மாத்திரம் மேற் கொண்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்காக கழிவு வழங்கப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது வீதவரி நிலுவையாகக் காணப்பட்ட 167 ஆதனங்களுக்காக மீளாய்வாண் டிற்கான வரி செலுத்தும் போது ரூபா 397,289,940 இற்கான கழிவு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய முறையில் வீதவரி செலுத்துவோர் மற்றும் நிலுவை காணப்படுவோருக்கு சமமான முறையில் கழிவு வழங்கப்படுவதன் மூலம் உரிய முறையில் வீதவரி செலுத்துவோருக்கு மறைசார் தாக்கம் ஒன்று ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டது. | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். | வரி செலுத்துவோரின் ஏனைய நியாயமான கோரிக்கை தொடர்பாகவும் சபையின் நிதி நிலைமைக்கு ஏற்படக் கூடிய தாக்கத்தையும் கவனம் செலுத்தி நிலுவை மீதிகளை கொண்ட ஆதனங்களுக்காக கழிவு வழங்கப்பட்டு நடைமுறைக் கொடுப்பனவு மேற்கொள் வதற்கு சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது. |

**(ஆ) களியாட்ட வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட களியாட்டங்கள், இசை கச்சேரிகள், விளையாட்டுப் போட்டி களுக்காக அறவிடப்பட்ட களியாட்ட வரித் தொகை ரூபா 47,751,423 தொகை காணப்பட்டதுடன், மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 24,988,009 இற்கான களியாட்ட வரி விடுவிக்கப்பட்டிருந்தது.<br>விடுவிக்கப்பட்டிருந்த வரி நூற்றிற்கு 52 சதவீதம் ஆகும். 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சினிமா | வரி விடுவிப்புப் பணம் சமூக உபசரணை அலுவலகளுக்காக பயன்படுத்தப்பட்ட மைக்கான சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் மற்றும் நிலுவை களியாட்ட வரி அறவீடு செய்தல். | நடைமுறையிலுள்ள சட்ட நிலைமை மீது இந்த களியாட்ட வரித் தொகை ஏதேனும் நிபந்தனை அடிப்படை யில் விடுவிப்பதற்கான இயலுமை உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப் பான அமைச்சரிடம் காணப்பட்டது. அதன் காரணமாக மேற்கூறிய சட்ட நிலைமை மீது மேற்கொள்ளப்படும் விடுவிப்புக்களின் மூலம் சபை அவ் வருமானத் |

| | | |
|---|---|---|
| கொட்டகைகளில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த களியாட்ட வரித் தொகை ரூபா 29,726,002 தொகையாகும். | | தை இழக்கின்றது. 2019 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய சினிமா கொட்டகை வருமானம் ரூபா 41,121,172 தொகை ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவையில் 2020 செப்தெம்பர் 01 திகதி வரை ரூபா 26,594,604 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டது. மீது நிலுவைத் தொகைக் காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு பிரதான வருமானப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(இ) வியாபார மற்றும் தொழில்வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார வரிக்காக சிட்டையிடப் பட்டிருக்காததுடன், ஆண்டின் போது கிடைக்கும் தொகை பண அடிப்படையின் மீது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது ரூபா 32,665,250 இற்கான வருமானம் ஒன்று உழைக்கப்பட்டிருந்ததுடன், வருமானத்தை அறவிடப்பட வேண்டிய இடங்களை சரியாக இனங்கண்டிருக்காமையினால் கணிசமான அளவு வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | சரியான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | நீதிமன்றத்தின் மூலம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பான கட்டளை வழங்கப்படாமை யால் மற்றும் தண்டப் பணம் மாத்திரம் அறவிடப் படுவதனால் அவ்வாறான சீராக்கல் மேற்கொள்ளப் படுவதென கருணையுடன் அறிவிக்கின்றேன். இது தவிர உரித்தாக்காமை சான்றிதழ்கள் வழங்கும் போது கூடிய அளவு வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் இனங்காணப்பட்டிருந்த வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளவேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை 2900 தொகை எனினும் மீளாய்வாண்டின் போது வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களின் | சரியான கணிப்பீடு ஒன்றின் மூலம் வியாபார வர்த்தக நிலையங்கள் தொடர்பான சரியான புள்ளி விபரங்களைப் பெற்றுக் கொள்ளல் | சபையினால் வர்த்தகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட கணிப்பீடுகளின் போது இனங்காணப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்படு வதுடன் |

| | | |
|---|---|---|
| எண்ணிக்கை 1719 மாத்திரமே காணப்பட்டது. | மற்றும் அந்த அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் வியாபார அனுமதிப் பத்திரம் வழங்குதல். | அவ்வாறு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத நிறுவனங் களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படு கின்றது. கணிப்பீட்டின் விளைவின் மீது ஆண்டிற்கு ஆண்டு வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் வழக்குத் தாக்கல் செய்யும் எண்ணிக்கை வித்தியாசப்படும். |

**2.3.2 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **அங்காடிக் கடை வாடகை** | | |
| | மொத்த அங்காடிக் கடைகளின் எண்ணிக்கை 4668 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் 1717 கடைகள் செயற்படாத நிலையில் காணப்பட்டது. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படல். | மொத்த அங்காடிக் கடைகளில் 1717 செயற்படாத கடைகள் தொடர்பான நிலுவை மீதியை அறவீடு செய்ய முடியாமை யால் தொடர்ந்தும் கணக்குகளில் பேணப்பட நேரிட்டுள்ளது. |
| (i) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய அங்காடிக் கடை வாடகைப் பெறுமதி ரூபா 473,149,925 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் தற்போது செயற்படாது இருக்கும் கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 112,929,813 தொகை உட்பட்டிருந்தது. | நிலுவையை அறவீடு செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் இந்த நிலுவையை அறவிட முடியாத மீதி என கணித்து சீராக்கல் மேற்கொள்வதற்கும் ஏனைய செயற்படாத கடை களை கேள்வி அல்லது சாட்டுதல் மூலம் வழங்கப்பட்டு அதனூடாக வருமானம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |

**(ஆ) வீட்டு வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு மா நகரக்கு சொந்தமாக 18 வீட்டுத் தொகுதிகளில் காணப்பட்ட 840 வீடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | உயர்ந்த சந்தைப் பெறுமதியை உடைய கொழும்பு நகர எல்லைக்குள் அமைந்துள்ள இந்த வீடுகளில் இருந்து மிகவும் குறைந்த மாதாந்த வாடகை அறவிடப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி மதிப்பீடு மீது விரைவாக வீட்டு வாடகை திருத்தம் மேற்கொள்ளப்படல். | வீட்டு வாடகையை அதிகரிப்பதற்காக 2017 ஆண்டின் போது சபைப் பிரேரணை ஒன்று தயாரிக்கப்பட்டு நகர பொறுளாளரினால் சமர்ப்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதுடன் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது ஏற்பட்டிருந்த குறைபாடு கள் மீது 840 வீடுகளில் சுமார் 290 வீடுகளின் வாடகையை அதிகரிக்க முடியாமல் போனது. |
| (ii) | வீட்டுத் தொகுதிகளில் இருந்து 2019 ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய மொத்த வீட்டு வாடகை ஆகிய ரூபா 16,149,682 தொகையில் 2019 ஆண்டின் போது ரூபா 1,641,021 தொகை எனப்படும் 10 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இங்கு கணிசமான எண்ணிக்கையான வீடுகளில் இருந்து நீண்டகாலம் முதல் வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன் அந்த வாடகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் படி செயற்படுதல். | தற்போது இந்த வீடுகள் வழங்கப்பட்டவர்களின் பின்னைய சந்ததியினர் வசிப்பதனால் மற்றும் அவர்கள் உடனான உடன்படிக்கை நாளது வரை ஆக்கப்பட்டிருக்காமை காரணத்தினால் குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்வதற்கு, இந்த வீட்டுத் திட்டங்களின் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்வதற்கு அல்லது நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு முடியாத நிலைமையொன்று காணப்படுவதுடன் வருடாந்தம் சிவப்பு அறிவித்தல் மூலம் நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என கருணையுடன் அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) துணை விதிகள்** | | |
| மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 272 பிரிவின் கீழ் முக்கிய கருமங்களை நிறைவேற்று வதற்காக துணை விதிகள் ஆக்கவேண்டி இருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 திகதி வரை கைத்தொழில் மற்றும் கழிவுப் பொருட்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கைத்தொழில்கள் மற்றும் திண்மக் கழிவுப்பொருள் முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான விதிகள் தயாரிக்கப்பட்டு தற்போது நகர சபையின் சட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அத் திணைக்களத்தின் பரிந்துரை பெற்றதுடன் மாகாண ஆளுனருக்கு அனுப்பி அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதி சுற்றறிக்கை யின் அறிவுரைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் படி இனங்காணப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்ட காலசட்டகம் எதிர்பார்க்கப் பட்ட வெளியீட்டு பெறுபேறு களுடன் தயாரிக்கப்பட்டு ள்ளது. எதிர்காலத்திலும் வருடாந்தம் செயல் நடவடிக்கைத் திட்டம் மேற் கூறிய முறையில் தயாரிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| | | |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 447,290,081 தொகை பெறுமதியான 98 செயற்திட்டங் களில் ரூபா 67,262,245 தொகைக் கான 24 செயற்திட்டங்களின் வேலைகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், ரூபா 22,191,905 தொகை பெறுமதி யான 07 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | தாமதங்களை குறைப் பதற்கு நடவடிக்கை எடுத்தல். | கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் மற்றும் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்ளாமை.**

| | | |
|---|---|---|
| சபையின் 19 திணைக்களங் களுக்காக ரூபா 12,266,996,419 இற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப் பட்டிருந்த போதிலும் அக் கருமங்களின் செயலாற்றல் சுட்டிகளை இனங்கண்டிருக்காமை மற்றும் செயலாற்றல் அறிக்கை சமர்பித்திருக்காமையினால் செயலாற்றல் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்பட்டுள்ளனவா என மற்றும் எதிர்பார்த்த விளைவுகளை தனதாக்கி உள்ளதா என பெற்றுக்கொள்ளப்பட்டனவா உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | செயலாற்றல் சுட்டி களை இனங்காணல் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தயாரித்தல். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

**(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | சபையின் வருடாந்த தேறிய மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 8,123,909,385 தொகையில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 3,175,390,546 தொகை அதாவது வருமானத்தில் முப்பத்து ஒன்பது சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 ஆவது பிரிவின் பிரகாரம் மா நகரத்தில் சேகரிக்கப் படும் குப்பையை சபையின் ஆதனம் ஒன்றாக ஆக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு செலவுப் பொறுப்பொன்று மாத்திரம் ஆக்கப்பட்டிருந்தது. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுதல். | கொழும்பு மாநகர சபையில் சேகரமாகும் குப்பைகள் முகாமைத்துவம் செய்யும் போது அவற்றின் முறையான பெறுமதியினை பெற்றுக் கொள்வதற்காக இந்தக் குப்பைகள் வளம் ஒன்றாக இனங்காணல் அதன் படி முறையான மீள்சுழற்சி ஒன்றிற்காக தொடர்புபடுத்தல் அவற்றிற்கு தேவையான வசதிகளை மேம்படுத்தல் பொது மக்களை அறிவுறுத்துவதற்கும் கொழும்பு மாநகர சபையினால் நீண்ட காலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. |
| (ii) | திண்மக் கழிவுப் பொருள் மீள் சுழற்சிக்காக 2019 பாதீட்டின் மூலம் ரூபா 2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீள்சுழற்சி அலுவல்கள் மேற்கொள்ளப்படாமையால் அதற்காக செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 பிரிவின் பிரகாரம் குறுகிய கால மற்றும் நீண்ட கால வேலைத் திட்டங்கள் தயாரித்தல். | இதற்கான பெறுகை நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் குறிப்பிட்ட கொள்வனவுக் காக பொதுக் கூட்டத்தின் அங்கீகாரம் 2019 ஆம் ஆண்டு இறுதி அளவிலே யே கிடைத்திருந்தது. |
| (iii) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை ரூபா 136 மில்லியனிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டி ருந்த போதிலும் அவ்வாறான காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவம் மேற் கொள்ளப்பட வேண்டும். | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற் திட்டங்களுக்காக பொருத்தமான காணி ஒன்று கொழும்பு மா நகர சபை எல்லையுள் காணப்படாத துடன் அதற்காக காணி ஒன்று கொழும்பு மா நகர சபையினால் வெளிப் பிரதேசத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு அதன் பின்னர் ஏற்பட்ட பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக குறிப்பிட்ட செயற்திட்டத்தை செயற் படுத்துவதற்கு இயலாமல் போனால் அது நகர சபைக்கு பாரிய நட்டம் ஒன்று ஏற்படுவதற்கு காரணம் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 6 பிராந்திய அலுவலகங்களின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ சேவைகளை தனியார் துறையினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2019 ஆண்டின் போது ரூபா 2,206,849,608 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதற்காக வருடாந்தம் கேள்வி அழைப்பின் மூலம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 03 பிராந்திய அலுவலகங்களில் ஒப்பந்த வேலை வழங்கள் பெறுமதியை அதிகரித்தல் ரூபா 34,070,720 தொகையாகக் காணப்பட்டதுடன், அவை 34 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சல் காணப்பட்டது. அதே போல் 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கேள்வி வழங்கும் போது மதிப்பீட்டை விட 12 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையான அதிகரிப்பொன்றுடன் கேள்வி வழங்கப்பட்டிருந்த 17 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுதல். | அவ்வவ் மாவட்டங்களில் காணப்படும் வேலைப் பகுதிகளுக்கு மேலதிகமாக புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தி பண்புசார் விதமாக உயர்ந்த சேவை ஒன்றினை பொது மக்களுக்கு வழங்குவதற்கு அதே போல் சேவையின் தேவையின் மீது புதிதாக இனங்காணப்பட்ட மேலதிக வேலைப் பகுதிகள் புதிய ஒப்பந்த வேலைகளின் கீழ் உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு மனித வளம் மற்றும் இயந்திர உபகரணங்களும் அவ் ஒப்பந்த வேலைகளுக்காக சேர்க்கப்பட்டதுடன், அங்கு பழைய ஒப்பந்த வேலையை விட புதிய ஒப்பந்தவேலையின் விலை அதிகரித்தல் ஏற்பட்டுள்ளது. |
| **(ஊ)** | **சுற்றாடல் சிக்கல்கள்** | | |
| | குப்பைகளை குறைத்தல், குப்பை களை மீண்டும் பயன்படுத்தக் கூடிய நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தல், குப்பைகளை வகைப்படுத்தல் மற்றும் மீள்சுழற்சிக்கான முறையான மற்றும் விரைவான வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்துதல் ஆகியன தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தாமல் தற்போது சபையின் அதிகாரச பிரதேசத்தில் குப்பைகள் இலங்கை காணி மீட்புசெய்தல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன த்திற்கு சொந்தமான காணி ஒன்றில் அகற்றப்படுதல் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. | பொலிதீன் மற்றும் ஏனைய குப்பைகளை மீள்சுழற்சி அலுவல் களுக்காக தொடர்ச்சி யாக ஈடுபடுத்தல். | கொழும்பு நகரத்தில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ அலுவல்கள் முக்கியமாக 3R நடை முறைகளை அடிப்படையாக கொண்டு செயற்படுத்தப் படுவதுடன் அங்கு உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு பல்வேறு நிறுவனங்களின் மூலம் செயற்படுத்தப்படும் நடைமுறைகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப் பட்டு குறிப்பிட்ட முகாமைத் துவ அலுவல்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு மாநகர சபையினால் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகள் தொடர்பாக அறிந்திருக்காததுடன் அதன் காரணமாக 2019 திசெம்பர் 31 திகதி வரை நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளை இனங்கண்டு இருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளை இனங்கண்டு அதன் படி திட்டம் பிராந்தியப்படுத்தப் பட்டுள்ளது. |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **3.2.1 காணி உரிமையை உரித்தாக் காமை வீதவரி இலக்கம் - 43** | | |
| கருவாக் காடு மார்க்ஸ் இடத்தில் அமைந் துள்ள 154.43 பர்சஸ் விதைக்கும் பரப்பினை உடைய ஆதனம் ஒன்றின் உரிமையாளரினால் வீதவரி செலுத்தாமை காரணத்தினால் மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 263 ஆம் பிரிவின் பிரகாரம் 1974 ஒக்தோபர் 07 ஆந் திகதி கொழும்பு காணி பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த ஆதனத்தின் சட்ட ரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி அளவிலும் காணியின் அனுபவித்தலை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியின் அனுபவித்தலை உரித்தாக்குவதற்கு செயற்படுத்த வேண்டியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| **3.2.2 வீதவரி நிலுவையாகவுள்ள ஆதனங்களை உரித்தாக்காமை** | | |
| 2003 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை இனங்காணப்பட்டி ருந்த ரூபா 214,628,001 இற்கான நிலுவை வீதவரி செலுத்த வேண்டியிருந்த 193 ஆதனங்கள் அந்த ஆதனங்களின் உரிமையாளர்கள் தொடர்பாக மற்றும் இறுதியாக உரிமை கோரிய | மா நகர சபைக் கட்டளைச் சட்டத் தின் 259 பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்ததுடன் மற்றும் நிலுவை வீதவரி அறவீடு செய்யும் அலுவல்கள் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2003, 2006, 2007, 2014 மற்றும் 2016 ஆண்டுகளின் போது ஏல விற்பனை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஆனால் காணி உறுதிகளை கண்டுபிடித்தலில் சிக்கல் காணப்பட்டமையால் |

| | | | |
|---|---|---|---|
| | காணி உறுதி மற்றும் வரைபு என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாமையினால் 2019 திசெம்பர் 31 திகதி வரை மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 259 இன் பிரகாரம் விற்பனைச் சான்றிதழ் எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகவும் விரைவாக மேற்கொள்ளல். | இது வரை சபைக்கு உரித்தாக் கப்படாத 188 ஆதனங்கள் காணப்பட்டன. நிலுவைத் தொகையை செலுத்தி ஆதனங்களை விடுவிப்பதற் காக சந்தர்ப்பம் வழங்கும் படி ஆதன உரிமையாளர் சிலரினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமையால் மற்றும் நகர சபையின் அடிப்படை குறிக்கோள்கள் நிலுவை வீதவரியை அறவீடு செய்தல் என்பதனால் ஆதன உரிமையாளர்களுக்கு அறிவித்து ஒரு மாதத்துக் குள் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நகர ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |
| **3.2.3** | **கொழும்பு 5 ஹெவ்லொக் வீதி இலக்கம் 149/B விளையாட்டுத் திடல் வாடகைக்கு கொடுத்தல்** | | |
| | 2012 ஜனவரி 17 ஆந் திகதிய 3785 ஆம் இலக்கங் கொண்ட உடன்படிக்கையின் மூலம் இலக்கம் 149/B கொழும்பு 5 ஹெவ்லொக் வீதி விளையாட்டுத் திடலை 20 வருட காலத்திற்கு அமைப்பு ஒன்றிற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | உடன்படிக்கையின் பிரகாரம் மாநகர சபையினால் 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட்ட குத்தகையை வாடகையாளரினால் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஜனவரி 01 திகதி முதல் திருத்தப்பட்ட குத்தகை ரூபா 300,000 குறிப்பிட்ட அமைப்பினால் கொடுப்பனவு செய்யாமல் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியுள்ளது. | 5 வருடங்களுக்கு ஒரு முறை குத்தகை திருத்தும் போது ரூபா 300,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டது. அவர்களினால் மேற்கொள் ளப்பட்ட மேன்முறையீட்டின் படி அது ரூபா 230,000 வரை குறைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேன்முறையீட்டின் படி நகர பெறுமதி மதிப்பீட்டாளரினால் ரூபா 230,000 தொகை வரை குத்தகை குறைக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஜனவரி 01 திகதி முதல் 2019 திசெம்பர் 31 திகதி வரை உடன்படிக்கை கையொப்பமிடப்படும் திகதியில் காணப்பட்ட குத்தகை தொகை ஆகிய ரூபா 115,000 வீதமும் வாடகை அறவிடப்பட்டு காணப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியுள்ளது. | இரண்டாவது தடவை பெறுமதி மதிப்பீட்டின் படி ரூபா 230,000 இற்கான தொகையையும் குறைக்கும் படி குத்தகையாளரினால் கோரப்பட்டிருந்தது. அதன் படி மீண்டும் பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள் ளப்பட்டதுடன் அந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கும் வரை ஆரம்பத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 115,000 இற்கான பெறுமதியை செலுத்து வதற்கு குறிப்பிட்ட விளையாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்திருந்தது. |
| (இ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,171,050 நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்விடயங்களை விரைவுபடுத்தல். | குறிப்பிட்ட நிலுவை வாடகையை செலுத்தாமை தொடர்பாக சட்ட பிரிவுக்கு கோவை அனுப்பப்பட்டுள்ள துடன் 2020 ஜூலை 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட ஆதனத்தை சபைக்கு உரித்தாக்குவதற்கு சட்ட ஆலோசனை வழங்கப் பட்டிருந்தது. குறிப்பிட்ட ஆதனம் தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுப்பதற் காக நிதிக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக வரைவு பிரேரணை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| **3.2.4** | **கொழும்பு 05 ஹெவ்லொக் வீதி இலக்கம் 149 மற்றும் 149/1 விளையாட்டுத் திடலை வாடகைக்கு கொடுத்தல்** | | |
| | இந்த விளையாட்டுத் திடல் 1959 ஆம் ஆண்டு முதல் அவ்வப் போது வாடகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு தற்காலம் வரை வாடகைக்கு கொடுப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை முடிவடையும் போது புது உடன்படிக்கை ஒன்று ஆரம்பிக்கக் கூடிய விதமாக நடவடிக்கை எடுக்காமையால் உடன்படிக்கை தாமதமாக கையொப்பமிடப்பட்டிருந்தது. மேலும் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் | ஒரு உடன்படிக்கை காலம் முடிவடைய முன்னர் புதிய உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரியானவை என ஏற்றுக்கொள்கின்றேன். இது வரை 2019 திசெம்பர் 31 திகதி வரையான நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென கருணையுடன் அறிவிக்கின்றேன். |

காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 2,592,000 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

**3.2.5 கொழும்பு 5 பார்க் வீதி இலக்கம் 17 விளையாட்டுத் திடலை வாடகைக்கு கொடுத்தல்**

விளையாட்டுத் திடல் 1959 ஆம் ஆண்டு முதல் விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | இந்த விளையாட்டுக் கழகத் தினால் காலவரையறை முடிவடைந்த பின்னர் காலவரை யறை நீடிப்புச் செய்யாமல் அனுபவித்து வந்திருந்ததுடன், இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல் பின்னர் முற் திகதி இடப்பட்டு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் படும் நிலைமை ஒன்று தொடர்ந்தும் காணப்பட்டது. | ஒது உடன்படிக்கை காலம் முடிவடைய முன்னர் புதிய உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிட்ட விடயம் தொடர் பாக இணங்குகின்றேன். |
| (ஆ) | நகர சபை மற்றும் விளையாட்டுக் கழகம் என்பவற்றிற்கு இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த வாடகை ஒப்பந்தத்தில் இந்த ஆதனம் 05 வருடங்களுக்கு ஒரு முறை புதிய பெறுமதி மதிப்பீட்டுக்கு ஆளாகுவதாக குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் விளையாட்டுக் கழகத்தினால் பல தடவைகள் இந்த நிபந்தனைக்கு இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் விளையாட்டுக் கழகத்தை முன்னேற்றுவதற் காக பாரிய தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்ததெனவும் பண ரீதியான உதவி ஏதும் கிடைப்பதில்லை எனவும் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட வாடகைத் தொகை குறைக்கப்பட்டது. |
| (இ) | புதிய திருத்தப்பட்ட மாதாந்த வாடகை ஆகிய ரூபா 200,000 தொகை 2016 ஜனவரி முதல் திருத்தும் படி 2019 ஆண்டில் கோரியிருந்தது. 2017 ஆண்டின் போது விளையாட்டுக் கழகத்தினால் பிரசுரிக்கப்பட்டி ருந்த நிதிக்கூற்றுக்களின் படி உடன்படிக்கைக்கு முரணாக செயற்பட்டு தொலைபேசி கோபுரம் ஒன்றிற்கு வாடகைக்கு கொடுத்தல் மற்றும் சமையலறை வெளித் தரப்பினருக்கு வாடகைக்கு கொடுத்ததன் மூலம் வருடாந்தம் ரூபா 4,790,212 இற்கான மேலதிக | உடன்படிக்கைக்கு முரணனாக செயற் படுதல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் உடன்படிக்கை மேற்கொள்ளும் போது வாடகையாளரின் நிதி இயலுமை தொடர்பாக ஆழமாக பரிசோதனை செய்தல் | 2015 மற்றும் 2016 ஆண்டு களுக்கான நிதிக்கூற்றுக் களின் பிரதிகள் குறிப்பிட்ட குத்தகை கோவையில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரதிகள் கோவையில் காணப்பட வில்லை. எவ்வாறாயினும் தற்போது 5 விளையாட்டுத் திடல்களும் புதிய நடைமுறை ஒன்றின் கீழ் கூடிய வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் உடன்படிக்கை மேற்கொள் வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ஒன்றினை உழைத்திருந்த போதிலும் இவ்வாறான உடன்படிக்கைக்கு முரணான வருமானம் உழைப்பது தொடர்பாக மா நகர சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | திட்டமிடப்பட்டுள்ள துடன் 2020 திசெம்பர் 31 இன் பின்னர் வரக் கூடிய காலம் தொடர்பாக அந் நடைமுறையின் கீழ் நகர சபைக்கு மிகவும் அனுகூலமான நிபந்தனை களின் கீழ் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென கருணையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |

**3.2.6 மார்கஸ் பெர்னான்து மாவத்தை இலக்கம் 45 இல் அமைந்துள்ள டெனிஸ் விளையாட்டுத் திடலை வாடகைக்கு கொடுத்தல்**

1957 ஒக்தோபர் 07 ஆந் திகதி இலக்கம் 415 கொண்ட உடன்படிக்கையின் மூலம் மார்கஸ் பெர்னான்து மாவத்தை 45 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள காணியில் 4 ஏக்கர் 1 ரூட் 29.8 பர்சஸ் அளவான ஒரு பகுதி விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூபா 100 வாடகை அடிப்படையில் 25 வருட கால பகுதிக்காக வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | 1983 செப்தெம்பர் 30 திகதி இந்த வாடகை ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரை சட்ட ரீதியான உடன்படிக்கை ஒன்று இன்றி இந்த காணி விளையாட்டுக் கழகத்தினால் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. | நிலுவைத் தொகை மற்றும் தண்டப் பணம் விரைவாக அறவீடு செய்தல் மற்றும் ஆதனத்தை சபைக்கு உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் | நிலுவைத் தொகையை செலுத்தாமையால் ஆதனத்தை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க திட்டம் இடப்பட்டுள்ளதென கோவையில் இருந்து தெளிவாகிய போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 1983 செப்தெம்பர் 30 திகதி வாடகை உடன்படிக்கை முடியவடைந்த திகதி முதல் 1985 மே 31 வரை 20 மாத கால எல்லைக்காக 1958 இல் உடன்பட்டிருந்த மாதாந்த வாடகை ஆகிய ரூபா 100 இனை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | வாடகையாளரினால் நிலத்தினை பயன்படுத்திய உடன்படிக்கை காலத்திற்காக பொருளாதார பெறுமதி மதிப்பீடு செய்து வாடகை அறவீடு செய்தல். | 1958 உடன்படிக்கையின் படி மாதாந்த வாடகை ரூபா 100 என்பது சரியானது. இது கட்டிடங்கள் நிர்மாணம் செய்து அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட பெயரளவில் தரை வாடகை ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1997 ஜூலை 09 திகதி காணி உத்தியோகத்தர்களினால் நகர பெறுமதி மதிப்பீட்டாளரிடம் புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்று விண்ணப்பிக்கும் வரை 14 வருட கால எல்லை ஒன்று இந்த வாடகை உடன்படிக்கை தொடர்பாக தொடர் நடவடிக்கை ஏதும் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் எவராளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான கோவைகள் உரிய காலத்தில் மேற்பார்வை செய்தல் மற்றும் வாடகை தொகை மோசடி நடைபெறின் அவ்வாறான விடயங்களை தவிர்ப்பதற்காக தொடர்ச்சியாக தொடர்நடவடிக்கை எடுத்தல். | இந்த கோவை நகர பொறியியல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளதுடன் மேற்கூறப்பட்டுள்ளவாறு பல வருட காலம் உடன்படிக்கை மேற்கொள்ளப்படல் தாமதம் ஆனதை கண்டறியப்பட்டதுடன் சபை பிரேரணை ஒன்றிற்காக பெறுமதி மதிப்பீடு பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கோவையின் மூலம் தெளிவாகியது. |
| (ஈ) | விளையாட்டுச் சங்கத்தினால் 1958 ஆம் ஆண்டு முதல் மேற் குறிப்பிட்ட தரைப் பகுதிக்கு அண்மித்த நகர சபைக்கு சொந்தமான 55 பர்சஸ் காணிப் பகுதி ஒன்று சட்டரீதியல்லாத முறையில் பயன்படுத்தப்பட்டு காணப்படுவதுடன், இது தொடர்பாக 2019 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | சட்டரீதியல்லாத முறையில் காணிகள் அனுபவிப்பது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல், அக் காலப்பகுதிக்காக பொருளாதார வாடகை ஒன்று கணித்து அறவீடு செய்தல் மற்றும் இவ்விடயங்களை விரைவுபடுத்தல். | சட்டரீதியல்லாத முறையில் பயன்படுத்தப்படும் 55 பர்சஸ் காணி தொடர்பாக காணி உத்தியோகத்தரிடம் அறிக்கையொன்று கோரி இருப்பதுடன் அந்தப் பகுதி தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக சபை பிரேரணை ஒன்று தயாரிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |
| (உ) | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை 05 மாதங்கள் முதல் 132 மாதங்கள் இடைப்பட்ட காலவீச்சு தாமதம் ஆகிய பின்னர் நகர பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் விண்ணப்பித்திருந்ததுடன், நகர பெறுமதி மதிப்பீட்டுத் திணைக் களத்தினால் அவ்வறிக்கை 24 மாதம் 48 மாத காலவீச்சு தாமதத்தின் பின்னர் வழங்கப்பட்டிருந்தது. | இந்த தாமதங்களுக்கான பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறான தாமதங்களை தவிர்ப்பதற்காக உரிய நடவடிக்கை எடுத்தல் | அவதானிப்புக்களாக காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஊ) | வாடகை அறவிடுதல் முறைசார் விதமாக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பாரிய கால தாமதத்துடன் வாடகை அறவிடப்பட்டுள்ளது. 1985 ஜூன் 1 திகதி முதல் 2009 திசெம்பர் 31 திகதி வரை காலப் பகுதியுள் வாடகை ஏதும் அறவிடப்படாது இருந்ததுடன் அதுவரையான நிலுவைத் தொகை ரூபா 10,850,000 தொகையாகும். இந்தத் தொகையை முற்றாகத் தீர்ப்பதற்கு 32 வருடங்கள் கடந்துள்ளது. முறையான வாடகை உடன்படிக்கை | கால தாமதத்துக்காக தண்டப்பணம் அறவீடு செய்தல் மற்றும் அறவிடப்பட வேண்டிய தொகையை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு அல்லது காணியின் உரிமையை சபைக்கு உரித்தாக்குதல். | நிலுவைத் தொகை பகுதிகளாக அறவீடு செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப் பட்டிருக்காமையால் கால தாமதங்களுக்காக தண்டப்பணம் அறவீடு செய்வதற்கும் முடியாதிருந்தது. | | |
| (எ) | விளையாட்டுக் கழகத்தின் 2009 மற்றும் 2010 ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் படி 2000 ஆண்டு முதல் 2003 வரையான காலப் பகுதியில் கட்டிடங்கள் மற்றும் மதில்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 7,461,991 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த நிர்மாண வேலைகளுக் காக சபையின் அங்கீகாரம் பெற்றதற்கான சான்றுகள் காணப்படவில்லை. | அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலை கள் தொடர்பாக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்தல் | இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக தகவல்கள் சபையின் அங்கீகாரத்திற்கு மற்றும் வரைபுகள் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக் கப்பட்டுள்ளனவா என பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்விற்கு தகவல் வழங்குவதற்கு இணங்குகின்றேன். |
| (ஏ) | நிலுவைத் தொகை அறவிடப் படாமை மற்றும் முறையான வாடகை ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டிக்காத காரணத்தினால் விளையாட்டுக் கழகத்திற்காக 2019 ஆண்டு வரை வருடாந்தம் மதுவரி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக சபையின் எதிர்ப்பு இல்லை என மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்திருந்ததுடன், 1989 மே 23 திகதி நிர்மாண வேலை ஒன்றிற்காக கட்டிட அனுமதிப் பத்திரமும் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. | மது விற்பனையின் மூலம் பாரிய அளவு உழைக்கப் படுவதால் நிலுவைத் தொகையை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு அல்லது மது வரி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானிப்பு சரி என ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஐ) | 2015 ஜூன் 01 திகதி முதல் மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீடு ரூபா 750,000 என பெறுமதி மதிப்பீடு செய்யப் பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 115,000 தொகை வீதம் வாடகை அறவிடப்பட்டு காணப்பட்டது. | புதிய பெறுமதி மதிப்பீடு செல்லுபடியாகும் நாள் முதல் நிலுவை வாடகைத் தொகை அறவீடு செய்தல். | 2019 நவம்பர் மாதம் முதல் ரூபா 750,000 வீதம் மேற் கூறிய கழகம் செலுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த ஆதனத்துடன் தொடர்புடைய நிலுவை வீதவரி தொகை ரூபா 103,734 ஆகும். | நிலுவை வீதவரி அறவீடு செய்தல். | நிலுவை வீதவரி செலுத்து வதற்கு கழகம் இணங்கியுள்ளது. |

### 3.2.7 பொதுச் சந்தைகளை வாடகைக்கு கொடுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மா நகர சபைக்கு சொந்தமான 18 பொதுச் சந்தைகள் காணப்பட்டதுடன், அந்த பொதுச் சந்தைகளில் காணப்பட்ட 3046 வர்த்தக நிலையங்களில் வாடகைக்கு கொடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்ட 384 வர்த்தக நிலையங்கள் காணப்பட்டன. வாடகைக்கு கொடுத்திருந்த 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 122,020,685 தொகை ஆகும். | நிலுவை வர்த்தக நிலைய வாடகை அறவீடு செய்தல் மற்றும் விளைவற்றுக் காணப்படும் அனைத்து வர்த்த நிலையங்களையும் வாடகைக்கு கொடுக்க நடவடிக்கை எடுத்தல். | 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய டென்டர் பண்ணிய பின்னர் 111 வியாபார நிலையங்கள் மீதியாகக் காணப்பட்ட துடன் அந்த வியாபார நிலையங்கள் தொடர்ந்தும் டென்டர் மூலம் வழங்கு வதற்கு முயற்சிகள் எடுத்த போதிலும் அந்த வியாபார நிலையங்களை பெற்றுக் கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை. அதே போல் இந்த வியாபார நிலையங்களை போலவே சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏனைய அனைத்து கடைகளையும் டென்டர் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றது என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வியாபார நிலைய வாடகை ரூபா 1,000,000 தொகையை மிகைத்துள்ள வியாபார நிலைய உரிமையாளர் கள் 30 பேர் அவதானிக்கப்பட்ட துடன் அவர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த வியாபார நிலைய வாடகை ரூபா 87,201,662 ஆகும். | நிலுவைத் தொகை அறவீடு செய்தல் அல்லது சட்ட நடவடிக்கை எடுத்தல் | 2019 ஆம் ஆண்டு நிலுவையாகக் காணப்பட்ட வியாபார நிலையங்களுக் காக சிவப்பு அறிவித்தல் அனுப்பப்பட்டதுடன் அந்த நிலுவைத் தொகையை செலுத்தாமையால் உடன்படிக்கை மேற் கொண்டுள்ள வியாபார நிலையங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த வியாபார நிலைய வாடகைக்கு கொடுக்கும் செயற்பாடுகளில் இரண்டு சந்தை களில் 4 வியாபார நிலையங்கள் சபையின் விலைகூறல் மற்றும் டென்டர் விலை இடையே ரூபா 1,051,000 தொகை முதல் ரூபா 5,005,555 தொகை வரை வழமையல்லாத விலை வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. அதன் படி மா நகர சபையினால் வர்த்தக நிலையங்களின் வாடகையினை பெறுமதி மதிப்பீடு செய்யும் போது | சபைக்கு உச்ச மட்ட வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய விதமாக வெளிப்படை தன்மையுடன் சரியாக பெறுமதி மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளல். | கருத்துரை தெரிவிக்கப்பட வில்லை. |

சபைக்கு உச்ச மட்ட வருமானம் ஒன்றை பெற்றுக்கொள்ளக் கூடிய விதமாக சரியான பெறுமதி மதிப்பீடு ஒன்று மீது வாடகை கணிக்கப்பட்டிருக்க வில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **3.3.1 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள்** | | |
| க்ளிப்டன் மகளிர் மஹா வித்தியாலயத்தின் பின்பகுதியில் அமைந்துள்ள மதில் மீது மற்றும் அதற்கு அண்மையில் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் தரை மாடியில் இருந்த முதலாம் மாடி வரை நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் எல்லை மதிலை தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த 10’x15’ அளவான ஒற்றை மாடி நிர்மாண வேலை ஒன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. இந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலையை அகற்றித் தருமாறு பல சந்தர்ப்பங்களில் பாடசாலை அதிகாரிகளினால் கொழும்பு மா நகர சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தின் பிரதான சட்ட அலுவலரின் 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இந்த அங்கீகாரமற்ற நிர்மாணவேலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி நகர ஆணையாளருக்கு அறிவித்திருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்து அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அகற்றுதல் | கருத்துரை தெரிவிக்கப்பட வில்லை. |

**3.3.2 பாதையை சார்ந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள்**

| | | | |
|---|---|---|---|
| | தெரிவுப் பரிசோதனையின் படி 2A பிராந்திய அலுவலகம் 2B பிராந்திய அலுவலகம் மற்றும் 05 பிராந்திய அலுவலகங்களுக்கு உரிய பாதையை சார்ந்த 92 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் முறையே 92, 05 மற்றும் 18 ஆகும். | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | கருத்துரை வழங்கப்பட வில்லை. |

**3.3.3 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 பிரிவின் படி அட்டவணை இடப்பட்ட வீடொன்றினை பெற்றுக்கொள் வதற்காக உரிமை இல்லாத விவாகமான உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளத்தில் 12.5 சதவீதம் மற்றும் விவாகமாகாத உத்தியோகத்தர்களில் சம்பளத்தில் 7.5 சதவீதம் ஆக வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 03 திணைக்களங்களை சேர்ந்த வாடகை வதிபவர்கள் 74 பேரிடம் விவாகமான உத்தியோகத் தரிடம் 10 சதவீதமும் மற்றும் விவாகமாகாத உத்தியோகத்தர் ஒருவரிடம் 5 சதவீதமும் அறவிடப் பட்டிருந்தது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி வீட்டு வாடகை அறவீடு செய்தல். | XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் பொ.நி.சு 04/2016 பிரகாரம் உத்தியோகபூர்வ வாசஸ்தல வாடகை அறவீடு செய்வதற்கு உள்ளகச் சுற்றறிக்கை 07/2020 மற்றும் 2020 ஜுன் 04 ஆந் திகதிய சுற்றறிக்கையின் மூலம் அனைத்து திணைக்கள தலைவர்களையும் அறிவுறுத்தி அவ்விடயம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஏதேனும் பதவி ஒன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வ வாசஸ்தலம் தவிர ஏனைய அனைத்து உத்தியோக பூர்வ வாசஸ்தலினதும் வாடகைக் காலம் 05 வருடங்களாகக் காணப்பட வேண்டியதுடன், பொதுச் சேவை உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வதியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 47 பேர் 06 முதல் 28 வருட கால வீச்சில் தொடர்ச்சியாக உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்து வருகிறார்கள். | அனைத்து உத்தியோ கத்தர்களுக்கும் நியாயமான சந்தர்ப்பம் கிடைக்கக் கூடிய வகையில் செயற்பட வேண்டும். | கொழும்பு மா நகர சபையில் கடமைக்காக வரக் கூடிய உத்தியோகத் தர்களின் சேவையின் தேவையின் நிமித்தம் அவர்கள் கொழும்பு மா நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் தங்கியிருத்தல் அத்தியவசியமாக இருப்பதனால் அவர்களுக்கு கொழும்பு மா நகர சபையில் சேவையாற்றும் காலத்தில் முற்றாக உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்குதல் அத்தியவசியமாகும். அதே போல் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் பட்டியல் இடப்படுவதற்கும் நாளது வரை ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இடமாற்றம் பெற்ற மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 23 பேர் 2019 திசெம்பர் 31 திகதி அளவிலும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங் களை அனுபவிப்பதனால் தாபனக் கோவையின் XIX அத்தியாயத்தின் 7.2 பிரிவின் பிரகாரம் தண்டனை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2020 ஜுன் வரை இடமாற்றம் பெற்று வந்த நகர ஆணையாளர் இருவரிடம் அறவிடப்பட வேண்டிய தண்டனை வாடகை ரூபா 27,100,751 தொகை என கணிக்கப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறான உத்தியோகத்தர்கள் தாமதம் இன்றி உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து அகற்றுவதற் காக சட்ட நடவடிக்கை எடுத்தல். | குறிப்பிட்ட தண்டனை வாடகை கணிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக அவர்கள் சேவையாற்றும் இடங்களுக்கு மற்றும் நியமன அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. |
| (ஈ) | 1971 இன் 3 ஆம் இலக்கம் 1974 இன் 40 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1969 இன் 7 ஆம் இலக்க அரச வீடுகள் சட்டத்தின் கீழ் 40 வீடுகளின் வதிவோரை அகற்றுவதற்காக அகற்றல் கட்டளை பெறப்பட்டு இரண்டு வருடங்களை அண்மித்த காலம் கடந்துள்ள போதிலும் அவர்களை வீடுகளில் இருந்து அகற்றுவதற்கு 2019 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் தொடர்ச்சியாக உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை அனுபவிப் பதற்காக தண்டணை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கான கட்டளைகளை செயற் படுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர திட்டமிடல் பிரிவில் அங்கீக ரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை 140 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான எண்ணிக்கை 97 ஆக இருந்தது. இதில் அடங்கியுள்ள நகர திட்டப் பணிப்பாளர் பதவி 2015 ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப் பட்டதுடன் தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர திட்டமிடல் பிரிவில் காணப்படும் வெற்றிடங் களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை பெற்றுத் தருமாறு விண்ணப் பித்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்த பின்னர் உள்ளூராட்சி ஆணையாள ரினால் அமைச்சில் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>தொழிநுட்ப உத்தியோகத் தர் பதவியின் வெற்றிடங் களை நிரப்புவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேல் மாகாண ஆளுனரினால் 2013 ஒக்தோபர் 24 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த மேல் மாகாண அரச சேவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை யாப்பின் பிரகாரம் தொழிநுட்ப பிரிவொன்று நகர சபையில் நிறுவப்பட்டிருக்கவில்லை. எனினும், நகர பொருலாளர் திணைக்களத்தில் செயற்படும் கணினி முறைமைக்காக 2019 ஜனவரி 01 திகதி முதல் தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்காக செல்லுபடியாகும் விதத்தில் மாதாந்தம் ரூபா 95,000 ற்கான படி ஒன்றிற்காக கணினி அலோசகர் ஒருவர் வெளியில் இருந்து சேர்க்கப்பட்டிருந்தது. | சேவை யாப்பின் பிரகாரம் செயற்படுதல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நகர துணை உயிரின ஆய்வு கூடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் 28 பேர் எனினும், 08 பேர் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதேபோல், இந்த உத்தியோகத்தர்களில் 08 பேரில் 05 பேர் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் ஓய்வு பெறுவதற்கு உள்ளனர். | அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆய்வுகூட தொழநுட்ப வியலாளருக்கு பயிற்சி வழங்கி நியமனம் வழங்குவது சுகாதார அமைச்சினால் ஆகும். திணைக்களத்தின் வெற்றிடங்களை சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. எமது திணைக்கள் நிர்வாகத்திற்கு புறம்பான இந்த நிலைமையை தற்காலிகமாக கட்டுப்படுத்தி நாளாந்த சேவைகள் நடாத்துவதற்காக ஓய்வுபெற்ற ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்கள் இருவர் மாகாண சபையின் விசேட அங்கீகாரத்துடன் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். |
| (ஈ) | 2005 ஆண்டு முதல் தொடர்ந்தும் உழைப்பு கொள்வனவு செய்தல் அடிப்படையில் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் சேர்க்கப் பட்டிருந்ததுடன் இவ்வாறு சேர்க்கப் பட்டிருந்த உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களுக்காக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 101,789,909 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயங்கள் II மற்றும் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக உத்தியோகத்தர்கள் மற்றும் | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

ஊழியர்கள் சேர்க்கப் பட்டிருந்தனர்.

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஊழியர் கடன் மீதியில் 1191 ஊழியர்கள் தொடர்பான ரூபா 15,042,808 இற்கான அறவிடப்படாத செயற்படாத மீதி பெறுமதி ஒன்றும் காணப்பட்டது. | அறவிடப்படாத மீதியை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிட முடியாத மீதிகளை முறையாக புத்தகங் களில் இருந்து அகற்றுதல். | ரூபா 1,000 இற்கு மிகையான கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு திணைங்களங்களில் இருந்து உரிய விபரங்கள் போதியளவினதாக வழங்கப்படாமையால் மீதிகளை பதிவழித்தல் சிறிது தாமதம் அடைந்ததுடன் தற்போது திணைக்களங்களின் தகவல்கள் கிடைக்கப்பெற்று வருகின்ற தனால் எதிர்காலத்தில் அம் மீதியையும் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சொத்துக்களின் வகை | பெறுமதி (ரூபா) | விளைவற்றுக் காணப்பட்ட காலப்பகுதி | | |
| (அ) | புற்றுநோய் இரசாயனப் பொருட்கள் | 1,335,000 | 02 வரு. | சாத்தியக் கூறு ஆய்வின் பின்னர் அத்தியவசிய உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்தல். | கருத்து தெரிவித்திருக்கப்பட வில்லை. |
| (ஆ) | மரத்தின் கட்டமை ப்பை பரிசோதனை செய்யும் இயந்திரம் | 7,400,000 | 5½ வரு. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோக த்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் விரைவாக இயந்திரத்தை பயன் படுத்த நடவடிக்கை எடுத்தல். | இந்த உபகரணத்தை செயற் படுத்துவதற்கு மற்றும் அந்த தரவு கட்டமைப்பை ஏற்படுத்து வதற்கு அதன் மூலம் தேவையான தீர்மானங்கள் பெற்றுக் கொள்வதற்கு தொழிநுட்ப அறிவுடன் மற்றும் மரங்கள் பற்றிய அறிவு Horticulturist மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | Arborist போன்ற பதவிகளை உடைய உத்தியோகத்தர் ஒருவர் தேவைப்படுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யில் உட்பட்டுள்ள அவ் வெற்றிடத்தை இது வரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. இந்த வெற்றிடத்தை நிரப்பும் படி குறிப்பிட்ட பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கொழும்பு 12 பெரடயிஸ் இடத்தில் அமைந்துள்ள லொன்டரி வளவில் நிர்மாணித்துள்ள 64 வீடுகள் | 200,863,837 | 4 வருடங் களை மிகைத் தவை | வதிவோருக்கு மற்றும் குறைந்த வருமானம் உடைய வீடற்ற பொது மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 42 வீடுகளுக்காக வீடுகள் பெறுவோர் தெரிவு செய்து அதற்காக சபையின் அங்கீகாரத்தை பெற்றிருந்த துடன் ஏனைய 22 வீடுகளுக்காக வீடுகளை பெறுவோர் தெரிவு செய்தல் மற்றும் அதற்கான சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | 200 பக்கி கடைகள் | 5,865,000 | 4 வருடங் களை மிகைத் தவை | பயன்தரு அலுவல்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (உ) | 2018 ஏப்ரல் 18 ஆம் திகதி கொள்வனவு செய்து சதுடுஉயன வளவில் பொருத்தப் பட்டிருந்த சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் | 27,237,359 | 2 வரு. | உபகரணங்களை பெற்றுக்கொண்ட கம்பனியில் இருந்து பணம் அறவீடு செய்தல் அல்லது உரிய உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஊ) | கொழும்பு 14 மாதம்பிட்டிய 350 தோட்டத்தின் விழா மண்டபம் | 42,880,634 | 12 வரு. | பயன்படுத்தப்படாமல் உடைத்துவிடல் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று நடாத்துதல். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (எ) | மாதம்பிட்டிய ஆய்வு கூடம் | 5,885,789 | 03 வருடங் கள் | விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஏ) | வடிகாலமைப்பு பிரிவின் நிதிப்படுத்தல் மற்றும் கணக்கீட்டு முறைமை | 3,159,875 | 2 வருடங் கள் | விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர்ந்த சந்தைப் பெறுமதி ஒன்றினை உடைய 16 ஆதனங்களை தற்போது அங்கீகாரமின்றி அனுபவித்து வரல் தொடர்பாக சபை அறிந்திருக்காத துடன் அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற அனுபவித்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஆ) | முகத்துவாரம் Elie House காணியின் 50 பர்சஸ்கள் 1992 ஜூலை மாதம் நிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியில் மீதியான 60 பர்சஸ்களையும் அந் நிறுவனத் தினால் தமது அலுவல்களுக்காக அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மேலும் அங்கு அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருந்த கண்டறியப்பட்ட போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | விரைவாக உடன்படிக்கை மேற் கொள்ளல் மற்றும் அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்பட்ட காலத்திற்காக வாடகை அறவீடு செய்வதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல். | இவ்விடயத்துடன் இணங்கு வதுடன் 2019 திசெம்பர் 30 ஆந் திகதிய பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டவாறு அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்ட 60 பர்சஸ் தொகையில் 20 பர்சஸ்கள் மாத்திரம் குறிப்பிட்ட நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2020 ஜூன் 24 கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட காணியின் அளவுக்காக புதிய பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுத் தருமாறு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இது வரை பெறுமதி மதிப்பீட்டுத் தொகை கிடைத்திருக்காத துடன் விரைவாக உடன்படிக்கை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 3.5.3 இருப்புக்கள் குறைவு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி நகர பகுப்பாய்வு ஆய்வுகூட களஞ்சியத்தில் ரூபா 113,719 தொகை பெறுமதியான 17 விடயங்கள் இருப்பு குறைவாகக் காணப்பட்டது. | விசாரணை ஒன்று மேற்கொண்டு நட்டத்தை அறவீடு செய்தல். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி நகர துணை உயிரின ஆய்வுகூட பிரதான களஞ்சியத்தில் ரூபா 10,366,027 தொகை பெறுமதியான 44 இருப்பு விடயங்கள் குறைவு ஒன்று காணப்பட்டது. அதே போல் அந்த களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 7,207,962 தொகை பெறுமதியான 38 இருப்பு விடயங்கள் காலவதியாகி இருந்தது. | குறைவு மற்றும் காலவதியாதல் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளல். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### 3.6.1 நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்தக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணத்தை செலவு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மேற்கொள்ள முடியாத போதிலும் 2010 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை காலப் பகுதியில் ரூபா 1,631,200,786 தொகை பூர்வாங்க அங்கீகாரம் இன்றி இந்தக் கணக்கில் இருந்து திருப்பி எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். சபையில் காணப்படும் நிதி நெருக்கடி யின் முன் ரூபா 1,631,200,786 தொகை இடையிடையே திருப்பி எடுத்த போதிலும் அவற்றில் ரூபா 1,026,200,000 தொகை மீண்டும் வைப்புச் செய்யப்பட்டது. மீதித் தொகை ஆகிய ரூபா 591,016,886 தொகை நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதற்கான காரணம் நிதியங்களை சேகரித்த வைத்தல் சிறந்த நிதி முகாமைத்துவத்தின் அடையாளம் ஒன்று அல்லாததினால் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்ளூராட்சி திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2012 ஜுலை 11 ஆந் திகதிய WP/LP/01/2012 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை யின் XVI பந்தியின் பிரகாரம் திட்டக் குழுவின் படிகள் ஒழுங்குபடுத்தல் கட்டணத்தில் இருந்து மாத்திரம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் திட்டக் குழுவின் படியாக ரூபா 13,983,900 தொகை இந்தக் கணக்கின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1989 மார்ச் 13 ஆந் திகதிய 10 ஆம் இலக்க திட்டமிடல் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள், மிகை தரை பிரதேச சதவீதம் மற்றும் வாகனங்கள் தரிப்பதற்கான குறிப்பிட்ட இட வசதி காணப்படாமை காரணமாக அபிவிருத்தி செய்வோரிடம் அறவிடப்படும் தொகையில் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாதாந்தம் செலவு வைத்து மீதியான 75 சதவீதத்தை விஷேட வங்கிக் கணக்கில் வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுமக்கள் உதவித் திணைக் களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வசித்து வந்த முன்னைய அறங்கொடை ஆணையாளர் ஒருவர் நீதிமன்ற கட்டளையின் மூலம் 2016 ஜனவரி 27 ஆந் திகதி வாசஸ்தலத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அவர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட வீட்டு வாடகை ரூபா 262,790 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல். | முன்னைய அறங்கொடை ஆணையாளரிடம் இருந்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான தகவல்கள் சட்ட உத்தியோகத்தர் களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | நகர செயலாளர் திணைக்களத் திற்குரிய வாகனம் ஒன்று 2017 செப்தெம்பர் 04 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் அது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினால் சமர்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி வாகன விபத்து மூலம் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 292,924 தொகை | விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல். | நி.பி. 104 இன் படி விசாரணை ஒன்று நடாத்தி அதன் மூலம் முன்னைய நகர செயலாளர் மற்றும் சாரதி ஆகிய இருவரிடமும் விபத்து காரணமாக கொழும்பு மா நகர சபைக்கு ஏற்பட்டிருந்த |

| | | | |
|---|---|---|---|
| | யினை அவ் வாகனத்துக்கு இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் மற்றும் வாகனத்துக்கு பொறுப்பான சாரதியிடம் சமமாக அறவிடப்பட வேண்டுமென பரிந்துரைக்கப் பட்டிருந்த போதிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | | நட்டத்தை அறவீடு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | முன்னைய பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஓய்வு பெற்ற பின்னரும் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தை திருப்பி ஒப்படைக்காமையால் தாபனக் கோவையின் XIX அத்தியாயத் தின் 7.2 பிரிவின் படி சபைக்கு அறவிடப்பட வேண்டிய தண்டனை வீட்டு வாடகை ஆகிய ரூபா 8,019,751 தொகையினை குறிப்பிட்ட உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டுமென 2019 நவம்பர் 31 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருந்த போதிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல். | முன்னைய பிரதான சுகாதார உத்தியோகத்தரிடம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய தண்டனை வீட்டு வாடகை யாகிய ரூபா 8,019,751 தொகை தொடர்பாக ஓய்வூதிய பணிப்பாளரின் கடிதத்தின் படி முன்னைய பிரதான சுகாதார உத்தியோகத்தர் அவ்வப் போது அறிவுறுத்திய போதிலும் இது வரை அவரின் இணக்கம் பெற்றுக் கொண்டிருக்க வில்லை. |
| (ஈ) | நகர தொழிற்சாலையில் உத்தியோகத்தர் 10 பேருக்கு விடுமுறை நாள் படி கொடுப்பனவு செய்யும் போது விரலடையாள பதிவின் படி உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் ஒரே நேரம் குறிப்பிடப்பட்ட 68 நாட்களுக்காக ரூபா 255,669 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வில் சுட்டிக் காட்டிய விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (உ) | 2018 ஆண்டு திசெம்பர் மாதத்தில் உத்தியோகத்தர்கள் 15 பேருக்கு மேலதிக நேரப் படி கொடுப்பனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது விரலடையாள இயந்திரத்தின் படி மேலதிக நேர எண்ணிக்கை 74 மணித்தியாலம் ஆக இருந்த போதிலும் மேலதிக நேர கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த காலம் 2900 மணித்தியாலங்கள் ஆகும். இதன் படி விரலடையாள இயந்திரத்தில் பதிவு செய்யப் படாத மேலதிக மிகை மணித்தியாலம் 2826 உடன் மொத்த மணித்தியாலங்கள் 2900 இற்காக ரூபா 309,104 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றிக்கையின் படி செயற்படல். | ஊழியர்களுக்கு மேலதிக நேரம் கணிக்கும் போது பிரிவுக்குப் பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தர் களின் மற்றும் பிரிவுக்குப் பொறுப்பான பொறியியலாளர் களின் பரிந்துரை மீது மேலதிக நேரம் கணிக்கப் படல் மேற்கொள்ளப் படுவதுடன் மேலதிக நேரம் கணிக்கும் போது விரலடையாள இயந்திரம் பயன்படுத்தல் செயல் ரீதியாக இயலாத கருமம் ஆகும். |

### 3.8 பெறுகை

### 3.8.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அனைத்து திணைக் களங்களும் அடங்கக் கூடிய விதமான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | முறையான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்தல். | சபையின் அனைத்துத் திணைக்களங்களும் அடங்கக் கூடிய விதமாக 2020 ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான திட்டம் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிறுவர் மூலவள நிலையத்தின் கூரையை திருத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 5,973,501 தொகை செலவிடப்பட்டிருந்தது. இங்கு ஒரு நிறுவனத்திடம் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட டய்ப் S எனப்படும் ஓடு வகை ஒன்று பயன்படுத்தப் பட்டு இருந்ததுடன் அந்த ஓடு வகையினை கூரையின் மேல் பரப்பும் போது கடைபிடிக்க வேண்டிய அடிப்படை நியமக் குறியீட்டினை பயன்படுத்தாமல் கூரை தயாரிக்கப்பட்டதனால் கூரை தயாரிக்கப்பட்ட நாள் முதல் ஓட்டுப் படுக்கைகளுக்கு இடையில் இருந்து மழை நீர் ஒழுகக் கூடியதாக காணப்பட்டது. | விசாரணை ஒன்று மேற்கொண்டு சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்தல். | 8 வருடங்களுக்கு மிகை யான காலம் கடந்துள்ள துடன் சிறுவர் மூலவள நிலையத்துக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கொழும்புப் பகுதிக்கு ஏற்பட்டிருந்த காலநிலை நிலைமையின் காரணமாக தாக்கம் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு எட்டு வருடங்களுக்கு மிகையான காலம் கடந்துள்ள வேயப்பட்டுள்ள ஓடுகளை மீள் தயாரிக்க நேரிட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்கிடக் கூடிய பெறுமதி ரூபா 2,548,691,248 தொகைக்காக 11 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பி இருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக விரைவாக பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வரைபுகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் விரைவாக பதில் அனுப்புவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

## 4.2 மாகாண அரச கணக்குக் குழுக் கூட்ட கட்டளைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண அரச கணக்கு குழுவினால் விசாரணை செய்வதற்காக நடாத்தப் பட்ட கூட்டத்தில் வழங்கியிருந்த 8 கட்டளைகளை 2019 திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தி யிருக்கவில்லை. | கட்டளைகளை விரைவாக செயற்படுத்த வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |